DINAMANI 25 NOV 2007

மரக்கன்றுகள் நடுவதன் முக்கியத்துவம்

விழாவில் சிறுவர்களிடம் மரக்கன்றுகளை வழங்குகிறார் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம். உடன், (இடமிருந்து) என். சுந்தரம் எம்.எல்.ஏ., கார்த்தி சிதம்பரம், மாவட்ட ஆட்சியர் பங்கஜ்குமார் பன்சல், ஈசா அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எம்.எஸ். ராஜரத்தினம், நகர்மன்றத் தலைவர் எஸ். முத்துத்துரை.

ப. சிதம்பரம் வலியுறுத்தல்

காரைக்குடி, நவ. 24: மரக்கன்றுகளை நடுவது, கோயில்களில் நடத்தப்படும் லட்சார்ச்சனை, கோடியார்ச்சனையில் இறைவன் பெயரை உச்சரிப்பது போன்றதாகும் என மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

காரைக்குடியில் சனிக்கிழமை நடைபெற்ற ஈசா மையத்தின் பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில், 2.5 கோடி மரக்கன்றுகள் நடும் விழாவில் சிதம்பரம் பேசியது:

ஈசாவின் இயக்கம் பல்வேறு முகங்களாக வளர்ந்து வருகிறது. அதில் ஒருமுகம் பசுமைக்கரங்கள் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் பசுமையான பூமியாக மாற்றக்கூடிய ஒரு திட்டம்.

தமிழ்நாடு மற்றும் பக்கத்து மாநிலங்களில் இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடும் திட்டம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் காலத்தில் அரசர்கள் மட்டுமே மரம் நட்டார்கள். இப்போதுகூட, லட்சார்ச்சனை, கோடியார்ச்சனை என நடத்துகிறோம். இறைவன் பெயரை ஒரு கோடி முறை உச்சரிக்கலாம். ஒரு கோடி மரக்கன்று நடுவது என்பது கோடி, கோடி அர்ச்சனைக்குச் சமம்.

இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடுவது என்பது இரண்டரை கோடி அர்ச்சனைக்கு சமம். மிகப் பெரிய இயக்கம், பெரிய முயற்சி.

சிவகங்கை மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட முடிவு செய்து, குழந்தைகள், பெரியவர்கள் என அதைப் பெற்றுள்ளனர். இந்த முயற்சி வெல்ல வேண்டும்.

வானம்பார்த்த பூமி, பின்தங்கிய பகுதி எனச் சொல்லிக் கொண்டே போக முடியாது. என்றாவது ஒரு நாள் பசுமையான பூமியாக மாற்ற முடியும் என்று நம்பிக்கை வேண்டும்.

நீர் குறைவாக உள்ள புதுதியில் கூட, வளரக்கூடிய மரங்கள் உண்டு. அதை வளர்க்க முடியும் என்று ஈசா மையத்தினர் முயற்சி செய்துள்ளனர். அவர்களுக்கு அனைவரும் ஒத்துழைத்து வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும் செய்யவேண்டும் என்றார் சிதம்பரம்.

விழாவுக்கு காரைக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் என். சுந்தரம் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் பங்கஜ்குமார் பன்சல், கார்த்தி சிதம்பரம், காரைக்குடி நகர்மன்றத் தலைவர் எஸ். முத்துத்துரை உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

விழாவில், ஈசா அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எம்.எஸ். ராஜரத்தினம், சிவகங்கை ஈசா மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ராமசாமி, பசுமைக்கரங்கள் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கிருஷ்ணன், எத்திராஜன், இளங்கோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.